# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

## CC.No.175/2024

Deposition of Witness of PW4

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : செந்தில் | Calling | : | |
| Father/Husband's Name | : சின்னசாமி | Age | : | |
| Village | : | | : | |
| Taluk | : | | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 24th June 2025.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**முதல் விசாரணை:**

நான் அரச்சலூர் வெங்கமேட்டில் வசித்து வருகிறேன். **13.10.2023**ம் தேதி மாலை மணிக்கு ஒரு கையெழுத்து போட்டேன். **13.10.2023**ம் தேதி மதியம் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் என்னிடம் சாட்சியாக கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன்.என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்தப் பார்வை மகஜர் அ.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

விபத்தில் இறந்தவர் உறவினர் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது பக்கத்து தோட்டத்தை சேர்ந்தவர்கள் இருந்தார்கள். சம்பவ இடத்தில் இருந்து காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்களாக என்றால் இல்லை. சம்பவ இடத்தில் தான் வைத்து தயார் செய்தார்கள். போலிஸ்காரர் தான் எழுதினார்கள். பக்கத்து தோட்டத்தைச் சேர்ந்தவர் களிடமும் கையெழுத்து வாங்கினார்கள். நான் இறந்துபோன குடும்பத்திற்கு

உறவினர் என்ற முறையில் ஆதரவாகக் கையெழுத்து செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தென்புறத்து தோட்டம் கனகுக்கு சொந்தமானது. வடபுறத்து தோட்டம் யாருக்கு சொந்தமானது என்று தெரியாது.

**ஒம்/– சாட்சி செந்தில்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**எழுமாத்துார் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.**

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.175/2024**

Deposition of Witness of PW 3

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ஆறுமுகம் | | Calling | : |
| Father/Husband's Name | : ராமசாமி | | Age | : |
| Village | : | | | : |
| Taluk | : | | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 24th June 2025.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**முதல் விசாரணை:**

நான் கருமாண்டம்பாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் **2** வருடங்களுக்கு முன்பு மதியம் **2.00** மணிக்கு லிங்காத்தாகுட்டைக்கு தென்புறமாக மேற்கிலிருந்து கிழக்காக மகேந்திரா பிக்கப் வேனை ஒருவர் ஓட்டி வந்தார். விபத்தில் சிக்கிய நபர் மண்கரட்டில் இருந்து தென்புறமாக மேற்குபக்கம் எதிரில் வந்தார். மகேந்திரா பிக்கப் மேற்கிலிருந்து கிழக்கே வந்தது. மேற்படி ரோட்டிலேயே நான் மருந்து அடித்துக்கொண்டிருந்தேன். மகேந்திரா வேன் வண்டி வேகமாக வந்து மோதியதை நான் பார்த்தேன். புல்லட்டில் வந்தவர் சம்பவ இடத்திலேயே அடித்துகீழே விழுந்துவிட்டார். போய் பார்த்தேன். அவரை எனக்கு ஏற்கனவே தெரியும் என்பதால் விபத்தில் அடிபட்டவரின் மனைவிக்கு போன் செய்தேன். உடனே சம்பவ இடத்திற்கு அனைவரும் வந்துவிட்டனர். பின்பு போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். கையெழுத்து போட்டேன். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள ஆஜர் எதிரி தான் அன்று மகேந்திரா வேனை ஓட்டிவந்த நபர் ஆவார். அவர் தான் இந்த விபத்தை ஏற்படுத்தினார்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.

விபத்தில் இறந்துபோன ராமசாமி எனக்கு ஏற்கனவே பழக்கம் என்றால் சரிதான். அவர் எல்ஐசி முகவர் என்றால் சரிதான். எனது உறவினர்கள் காப்பீடு எடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எங்கள் ஊருக்கும் விபத்து நடந்த இடத்திற்கும் **1 1/2** கிலோமீட்டர் தூரம் தான் உள்ளது. கிழமேல் நெடுஞ்சாலை ரோடு தான். அதில்

அதிக வாகன போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். கரும்புக்காட்டுக்கு மருந்து அடித்துக்கொண்டிருந்தேன். கனகராஜ் காட்டில் தான் மருந்து அடித்துக்கொண்டிருந் தேன். கனகராஜ் நான் மற்றும் வேலை ஆட்கள் இருந்தோம். அப்போது அங்கு ரோட்டில் சத்தம் கேட்டது. பிறகு நான் கனகராஜ் எல்லாம் போனோம் என்றால் சரிதான். கிழமேல் ரோட்டில் வடபுறம் மகேந்திரா பிக்கப்வேனும் தென்புறம் புல்லட் கிடந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளவாறு சேதாரம் ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு 1/2 மணி நேரத்திற்குள் போலிசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். பைக்கின் முன்பக்கம் சேதாரம் ஏற்பட்டது. மகேந்திரா வாகனத்தின் அல்லை பகுதியில் சேதாரம் ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். போலிசார் விசாரித்து என்னிடமும் கனகராஜ் இடமும் கையெழுத்து வாங்கினார்கள். விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லும் எதிரியிடமும் விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் சரிதான். அதன்பின்னிட்டு இந்த வழக்கு சம்மந்தமாக யாரிடமும் எந்த விபரமும் கூறவில்லை. ஆனால் மருத்துவமனைக்குச் சென்றேன். அ.சா.1க்கு வேண்டியவர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன். நான் சொன்னவறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**ஒம்/– சாட்சி ஆறுமுகம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.175/2024**

Deposition of Witness of PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பொன்னுசாமி | Calling | : | |
| Father/Husband's Name | : | சின்னுசாமி | Age | : | |
| Village | : | | | : | |
| Taluk | : | | | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 24th June 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது அரச்சலூர் பச்சாகுட்டையில் வசித்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கின் விபத்தில்இறந்துபோனவர் எனது உடன் பிறந்த அண்ணன் ஆவார். நான் எனது அண்ணனின் பிரேதத்தை ஈரோடு அரசுமருத்துவமனையில் வைத்து ஆய்வாளருக்கு அடையாளம் காட்டினேன். ஆய்வாளர் பிரேத விசாரணை செய்தார் அதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை

நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு மருத்துவமனையில் என் முன்னிலையில் பிரேதவிசாரணை செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/- சாட்சி பொன்னுசாமி

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.175/2024**

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சுந்தராம்பாள் | Calling | : |
| Father/Husband's Name | : ராமசாமி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 24th June 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது அரச்சலூர் பச்சாம்பாளையத்தில் வசித்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். இந்த விபத்தில்இறந்து போனவர் எனது கணவர் ஆவார். அவர் LIC முகவராகவும் விவசாயமும் செய்து வந்தார். சுமார் ஒன்றே முக்கால் வருடத்திற்கு முன்பு நான் வீட்டில் இருந்தபோது எனது உறவினர் போன் செய்து என் கணவர் லிங்காத்தாகுட்டை என்ற இடத்தில் கூல்டிரிங்ஸ் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக கூறினார்கள். நான் சென்று பார்த்தபோது தலை மற்றும் காலில் அடிபட்டிருந்தது. ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கணவரை அழைத்து சென்றபோது மருத்துவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். இதுசம்பந்தமாக அரச்சலூர் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எனது கணவரின் பிரேதத்தை காவல் ஆய்வாளருக்கு அடையாளம் காட்டி பிரேத விசாரணையின் போது உடன் இருந்தேன்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

எனது கணவருக்கு விபத்து நடந்தபோது வயது 70 இருக்குமா என்றால் 62 வயதாகும். எனது கணவருக்கு ஏற்கனவே விபத்து நடந்து தலையில் அடிபட்டிருந்தது என்றால் நன்றாகத்தான் இருந்தார். எனது கணவர் புல்லட் வாகனம் வைத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி புல்லட் வாகனத்தை

ஓட்டகூடாது என்று மருத்துவர்கள் அறிவுரை கூறியிருந்தார்கள் என்றால் சரிதான். எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. சம்பவ இடத்தில் இருந்து எனது வீடு எவ்வளவு துாரம் என்றால் 2 கிலோமீட்டர் இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் விபத்தில் நடந்த இடத்தில் நின்று இருந்தது என்றால் சரிதான். **அந்த புகைப்படும் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அரசு தரப்பில் மேற்படி புகைப்படம் எடுத்த தேதி, நேரம் குறிப்பிடப்படவில்லை என்றும், புகைப்படுத்தை யார் எடுத்தார் என்றும், அதற்கு 65B ன் கீழ் சான்றிதழ்தாக்கல் செய்யவில்லை என்றும் குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபனையின் பேரில் வழக்கு விசாரணையின் முடிவில் மேற்படி ஆவணத்தின் தன்மை குறித்து முடிவு செய்யப்படும் என்பதால் ஆட்சேபனையின் ஆவணம் குறியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது).** மேற்படி என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மகேந்திரா பிக்அப் வாகனத்தில் காணப்படும் சேதாரம் நான் என் கணவரை விபத்து ஏற்பட்டபோது பார்த்தபோது இருந்தது என்றால் சரிதான். என் கணவரின் பைக்கிற்கும் முன்பகுதி சேதாரம் இருந்ததா என்றால் சரிதான். பிக்அப் வேனுக்கு அல்லை பகுதியில் சேதாரம்இருந்தது.

2. காவல்நிலையம் சென்று போலீஸார் எழுதிய புகாரில் கையெழுத்து போட்டேனா என்றால் சரிதான். அதன்பின்பு மருத்துவமனை சென்றேன் என்றால் சரிதான். மருத்துவரிடம் ஏற்கனவே புகார் கொடுத்ததாக நான் சொன்னேன் என்றால் சரிதான். என்னிடம் மீண்டும் போலீஸார்விசாரித்தார்களா என்றால் இல்லை, கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். அதன்பின்னிட்டு என்னை யாரும் விசாரிக்கவில்லை. என் கணவரின் விபத்து வாகன இழப்பீடு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் கணவரின் விபத்து வழக்கிற்கு வழக்கறிஞர் மூலம் தான் புகார் செய்தேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றும், எனது கணவரின்விபத்து இழப்பீட்டிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**ஒம்/– சாட்சி சுந்தராம்பாள்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**எழுமாத்துார் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.**